உ

கணபதி துணை.

# கல்வளையந்தாதி.

யாழ்ப்பாணத்து நல்லூர்

சின்னத்தம்பிப்புலவர்

அருளிச்செய்தது.

இஃது

புன்னாலைக்கட்டுவன்

பிரசித்த நொத்தாரிசு

க. முத்துக்குமாரப்பிள்ளையால்

மயிலிட்டி

நல்லையாபிள்ளையினது

வச்சிரயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

தாது ௵ தை ௴.

## ஆக்கியோன் பெயர்.

செம்பொற் குவட்டினிற்பாரதந் தீட்டியசோட்டினன்சீர்க்
கம்பக் கரிமுகன் கல்வலை வாழுங் கணபதிக்கு
நம்பற் கினியமுற் சங்கத்து நூலென நல்லைச்சின்னத்
தம்பிப் புலவனல் லந்தாதி மாலையைச் சாற்றினனே.

உ

கணபதி துணை.

# கல்வளையந்தாதி.

## காப்பு.

தார்கொண்ட பூமல்லிகைச்சேக்கையிற்றும்பிசாலப்பம்புஞ்
சீர்கொண்ட கல்வளை யந்தாதி பாடத் திரைக்கடல்சூழ்
பார்கொண்ட பல்லுயிர்க் கானந்த மும்மதம் பாயுங்கும்பக்
கார்கொண்ட கம்பக் களியானை முன்னின்று காப்பதுவே.

ஒன்றா யிருசுடர் முத்தொழி னான்மறை யோதுமைந்தாய்
நன்றா யவாறங்கம் யாவுக்குங் காரண நாதனுமாய்
நின்றாய்நின் சல்வளை யந்தாதி பாடவென் னெஞ்சகத்துப்
பொன்றா வருள்புரி வாயானை மாமுகப் புங்கவனே.

---

கற்பக நாடர் பதின்சதக் கண்ணனெண் கண்ணன்றொழுங்
கற்பக வஞ்சி யிடக்கண்ணன் றந்தமுக் கண்ணனன்றிற்
கற்பக வேலெறி வேடுணை வன்கல் வளைப்பதிவாழ்
கற்பக நன்னிழல் சேர்ந்தார் கருக்கரை கண்டவரே. (௧)

கண்டலம் போதைப் புளினமென் றோர்ந்துகங் கம்பதுங்கிக்
கண்டல மாந்து சிறகாற்றுங் கல்வளைக் கற்பகநின்
கண்டல மூன்று மெனையாள்பொற் பாதமுங் காணவிண்ணு
கண்டலன் போற்கண் படைத்திலன் வாசக் கமலத்தனே. ()

கவானரம் பையஞ் சுரும்பு விரும்பு கருங்குழற்போ [சங்
கவானரம் பைக்குலம் போற்றிட வாழ்சல்கண் ணேனினிச்
கவானரம் பைங்க தலிக்கனி சிந்திடுங் கல்வளைப்புங்
கவானரம் பைத்திகழ் யாழ்க்கூற் றுமையருள் காதலனே.

அருளத் தனந்து சிலைகதை வாள்சுட ராழிகொள்ளை
யருளத் தனந்தந் தெரியா வகைநிற்கு மைம்முகனீன்
றருளத் தனந்த வனஞ்சூழுங் கல்வளை யண்ணலடி
யருளத் தனந்தரம் வாழ்வாரென் ருல்வினை யஞ்சிடுமே.

அஞ்சத் திரத்தன் முழவென வேகொதித் தார்த்துரப்பி
யஞ்சத் திரத்தந் தகன்வரும் போதுன் னபயநடை
யஞ்சத் திரத்த வடிவா ணயனத் தழலைபெற்ற
வஞ்சத் திரத்தன் றுணைவாதென் கல்வளை யானந்தனே. (௫)

தனந்தனந் தந்தி மருப்பன்ன மாதர் தரைவிரும்பு
தனந்தனந் தந்திகழ் தண்டுறை தோறுமென் சஞ்சரிகந்
தனந்தனந் தந்திமி யென்கல் வளையன்சங் கக்குழைக்கா
தனந்தனந்தந்தமொன் றுனென்றுநெஞ் சந்தனி லுன்னுமே.

சந்தன மின்னுபொற கச்சணி பாரத் தனதடம்ப
சந்தன மின்னிடைப் பூவஞ்சிக் கொம்பனை தையலுட்க
சந்தன மின்னலுற் றுள்கல் வளையன் றனதிடம்போஞ்
சந்தன மின்னம் வரக்கண் டிலோமென்ன தாமதமே. (௭)

தாமதிக் காந்தச் சிலைபோன் மனத்தினைத் தந்தசைகா
தாமதிக் காந்தகை மென்மொழிப் பூமின் றலைமகன்வே
தாமதிக் காந்தர மாகிநின் றேன்மைந்த தண்ணிதழித்
தாமதிக் காந்தம் புகழ்கல் வளையநின் றுட்கஞ்சமே. (௮)

கஞ்சக் கரந்தனின் மூவிலை வேல்கும்பங் கார்முகஞ்சங்
கஞ்சக் கரங்கதை மாதுள மேந்தி கவின்களம்பூ
கஞ்சக் கரம்பயில் வேல்வலைவைக்கொரு காந்தன்பொன்னு
கஞ்சக் கரப்புவி கும்பிடுங் கல்வளைக் கைவரையே. (௯)

வரையாரம் பாலன்ன தோண்கை வாணி வலவைகண
வரையாரம்பார்சடையார்கல்வளைவெற்புவண்ணமுத்தேன்
வரையாரம் பாளிதப்பூட் கொங்கைமீதுவயங்குதொய்யில்
வரையாரம் பால விழியா ளிடையின் வறுமைகண்டே.

மைக்கண்ட னேறிய தேரச் சறுக்கும் வரதன்வெந்தீ
மைக்கண்ட நம்மையொட் டாவைங் கரத்தண்ணல் வாழு
மைக்கண்ட வளநகை யார்குடையு மடுவினின்மா [மிடம்
மைக்கண்ட னீழலிற் சங்கினுந் தென்கல் வளைப்பதியே

கல்வளை யாத விரும்புநெஞ் சேகை யரோடுறவா
கல்வளை யார்சுனை வாயரக் காம்பல்செங் காவியின்பக்
கல்வளை யார நிலாவீச விள்ளுங் கழனிசுற்றுங்
கல்வளை யானங் குசபாச மேந்துங் கரன்புகழே. (௧௨)

கரும்பனை யத்தனைப் பூவே ழிடந்தசெங் கண்விடைப்பா
கரும்பனை யத்துவக்கீர்த்துடல்போர்த்தகடவுண்மொழிக்
கரும்பனை யத்தன்கை மாங்கனி வாங்கிய கல்வளைமா
கரும்பனை யத்தனை யான்மற வேன்புன் கவிதைகொண்டே

கவிநாய கன்றிடு வாய்க்கிரைப் பண்டங் கறையிரத்தக்
கவினா யகன்மக் குடம்பையை வீக்கியென் சண்டபயன்
கவிநாய கன்றொழும் ராமன் கொலைப்பவங் காய்ந்திடுதுங்
கவிநா யகதிருக் கல்வளை வாழுங் கணபதியே. (௧௪)

கணத்தலை வன்குழ விப்பிறைக்கோட்டன்கதிர்மணிப்பைக்
கணத்தலை வன்னச் சராக்கச் சரையன் களமரில்லங்
கணத்தலை வண்ண வளையூருங் கல்வளை காணிலரைக்
கணத்தலை வற்பகை முன்பணி மானுங் கருதிடினே. (௧௫)

கரியான னத்தன்றொழுபதம்வேண்டிற்கண் ணார்பவஞ்சங்
கரியான னத்த மவர்க்கிழைப் பாண்கடற் காசினிக்கோர்
கரியான னத்தம் புரிகோட்டுக் கல்வளைக் கண்ணமத
கரியான னத்தன் புகழ்பாடி யுள்ளங் கசிந்திடுமே. (௧௬)

சிந்தா மணிதென்ற லன்றி னிலாப்பகை செய்யவணி
சிந்தா மணிமுலை வாடின ளேழு செகமளந்த
சிந்தா மணிதுள வன்றேடு கல்வளைச் செய்யவருட்
சிந்தா மணிவரக் காணேன் பயோதரச் செல்லினமே.

தரங்க வளக்க ரொலிவே யிசைநனி தாக்கத்துப்ப
தரங்க வளக்கரிக் கொங்கைக் குதவிலன் றுரைநிரந்
தரங்க வலைப்பட வென்னை விடாமத தந்திசொல்லந்
தரங்க வளக்கல் வளைப்பதி மேவிய தற்பரனே. (௧௯)

பரசங்க முத்தமிழ் கல்லா வெனையனைப் பாவிதிகம்
பரசங் கரவென்று மெய்ந்நொந்து பெற்ற பலனன்றுதா
பரசங் கமவுயி ருக்குயி ராய பரஞ்சுடரே
பரசங்க மாறந் தணர்போற்றுங் கல்வளைப் பண்ணவனே.

அவலம் புரிமுக் குறும்பைந்து பூத மடக்கிமென்றூ [ய்
யவலம் புரிமலர் தூய்த்தொழுதேத்த வருண்மெய்யர்மெ
யவலம் புரிமருப் புத்தக ரூரு மறுமுகன்முன்
னவலம் புரிவயற் கல்வளை யாலயத் தாதிக்கனே. (௨௦)

திக்குடையானடியைப்போற்றிப்பூவலஞ்சென்றுசெஞ்சோ
திக்குடை நீழலின் மேவந்த ணீர்செப்பு வீரென்றன்பத்
திக்குடையான்கல்வளையாண்சிலம்பினிற்றேண்பண்ணையோ
திக்குடை யோதிச்செங் காலியுங் காளையுஞ் சென்றதுவே.

வேதா ரணிய முறைவேயின் முத்தருள் வேழமுய்ய
வேதா ரணியம்பொ ளூடேத்து கல்வளை வெற்பன்னமே
வேதா ரணிய மலைதிருக் கோயில் விளங்கநின்பால்
வேதா ரணியந்த காரநம் பாலில் விதித்தனனே. (௨௨)

தனையா யுதவிய தந்தையில் வாழ்க்கை நணந்தருட்சிந்
தனையா யுதகந் தனினின்று செய்யுந் தவத்திர்வெண்டந்
தனையா யுதகி யகிலம் படைக்குஞ் சதுர்விதவே
தனையா யுதன்றொழுங் கல்வளை யானைச் சரண்புகுமே.

சரந்தண் டருமலர்வேண்மைந்தனன்செந்தமிழ்க்கலைபஞ்
சரந்தண் டலையிற் கிளிதேருங் கல்வளை தங்கிடுதுஞ்
சரந்தண்ட பாணி யழகினைக் காணப்பொற றுமரைவா
சரந்தண்டர் போல விழையாத பார்வையத் தந்திலரே.

தந்தனந் தாமரை வெற்பிரு ணேரிடை சாய்நடைபா
தந்தனந் தார்க்குழல் யாமள கோமள சாமளப்பெண்
டந்தநந் தாபணை நெல்விளை கல்வளை தன்னிலொற்றைத்
தந்தநந் தாவிளக் கேயெனப் போமிருட் சம்பந்தமே.(௨௫)

சம்பந்த மாவினைத் தென்னவற் கீய்ந்தவன் றுங்குமருட்
சம்பந்த மாமுனி பாமாலை சூடி தருபொருண்மா
சம்பந்த மாலம் புணைசூழுங் கல்வளைத் தந்திவெம்பா
சம்பந்த மாயையென் பானீக்கி வாழ்வுசம் பாதிப்பனே.

பாலை வனத்தத்தைக் கியாரளிப் பாரென்று பன்னினளைம்
பாலை வனத்தடங் கார்கண்டு வெட்கும் படிவந்தமின்
பாலை வனத்தகன் றுள்கல் வளைப்பர மானந்தன்றன்
பாலை வனத்தள வும்மன் பிலாரிற் பதைபதைத்தே. (௨௭)

தைக்கும் பகழி யுடல்பாய் தறுகட் சயிலம்வந்த
தைக்கும் பகன தனத்தீர்கண் டீரெனிற் சாற்றிடுமே
தைக்கும் பகனண்முன் ஞேணைப்பந் தாடித் தகர்த்துரஞ்சி
தைக்கும் பகவன்றென் கல்வளை வாசன் றடமலைக்கே. ( )

மலைவல் லியம்பிரி யாத்தில்லைக் கானுறை மாமதங்கி
மலைவல் லியம்பிள நீரின் பயோதரி வாணிமைய
மலைவல் லியம்பிகை கான்முளை கல்வளை வாணன்பொங்க
மலைவல் லியம்பர வைய்யானெய் யாமுன் வரவல்லையே.

வரம்பல வன்பருக் கீவா ரெனக்குமெய் வாழ்வுதரு
வரம்பல வன்கொன்றை மாலிகை யாத்தி வணைந்தகற்ற
வரம்பல வன்பெற்ற மாதங்க வானனர் மள்ளர்செய்யும்
வரம்பல வன்குண் டலர்மூடுங் கல்வளை வானவரே. (௩0)

வானஞ் சலஞ்சலத் தீயொலி மண்மயங் காவுயிர்போ
வானஞ் சலஞ்சலம் வந்திடுங் காற்றுயர் மாற்றவரு
வானஞ் சலஞ்ச லெனவுரைப் பான்கல் வளைப்பதிவாழ்
வானஞ் சலஞ்சலக் கைத்தல மாறன் மருமகனே. (௩௧)

மகரந் தவள மலர்ச்சோலைப் பொங்கரின் வான்குளிரி
மகரந் தவழ்கல் வளையாகு வாகன வல்லவைவா
மகரந் தவள மருப்பானை வேங்கை மடங்கலெண்கு
மகரந் தவளைபுள் ளாறுலு நின்னை மறப்பரிதே. (௩௨)

அரவம் புலிங்க வனற்கண்ண வென்றரி போற்றச்சிலம்
பரவம் புலிபணி கேட்பமன் றாடி யருண்மதலை
யரவம் புலியணி கோடீரன் கல்வளை யண்ணல்கண்ணே
யரவம் புலிய குணத்தா ரெனினு மவர்முத்தரே. (௩௩)

தரப்பணி யாரம் பலபூண்டு தேர்முதற் றானைதற்சூழ்
தரப்பணி யாரைத் தடிந்துல காழ்தலிற் சர்க்கரைச்சுந்
தரப்பணி யார மமுதுசெய் வோன்கல் வளைத்தலத்தா
தரப்பணி யார்வத் தொடுஞ்செய்து வாழ்த றகவுடைத்தே

தகரங் கமழ்குந் தளந்தரளத்தள வின்னகையீர்
தகரங் கமலன் மணக்கோலஞ் செய்த றடாதிருபா
தகரங் கமலஞ் சிவந்தோன் மருகன் றவமற்றபா
தகரங்கண் மேவருங் கல்வளை யான்மலைச் சாரலிலே. ( )

இலங்கை யிராவணன் சண்டதுண் டம்பட வெய்சரம்ப
யிலங்கை யிராமன் கடதாரை சிந்தி யிரண்டிருகோ
டிலங்கை யிராவதன் றாழ்கல் வளைய னெனின்முத்திவா
யிலங்கை யிராது கடைத்தா டிறப்பிப்ப னேரம்பனே.

அம்பலங் காசில் வயல்சூழுங் கல்வளை யைங்கரனுட்
டம்பலங் காசியென் றாய்கேள்வர் பின்செ லவர்மதலா
யம்பலங் காசின் முலையாணின் கைதந்த வாசறப்பொன்
னம்பலங் காசிசென் றேவா தரவென் னருஞ்சொர்க்கமே.

கமண்டலம் பாற்கரன் போலாழி யேந்துங் கடவுள்நா
கமண்டலம் பாதளங் கைகூப்பு தாளென்று காட்டுவைபர்க்
கமண்டலம் பார்க்குமுய் யானம் வளைக்குங் கழனியிற்சங்
கமண்டலம் பாய முழங்கிடுங் கல்வளைக் காரணனே (௩௮)

காரண வாத திரிசூல பூத கணேசவன்பா
காரண வாததென் கல்வளை நாத கடம்பணிவா
காரண வாத முதலைந் திணைவைத்துக் காத்தழிக்குங்
காரண வாத நடந்தை யுலாவுங் கலகத்திலே. (௩௯)

கலகத் தமரத் திரையின் றுயரைக் களைந்தருட்ச
கலகத் தமர கதக்கம்பி யாற்செய் கடுக்கைபுல்ல
கலகத் தமரளி வாழ்சோலைக் கல்வளைக் கற்பகவென்
கலகத் தமரவிந் தத்திருக் காலெந்தக் கால்வைப்பதே. ()

வையத் திருக்கை யறுப்பா னெகினம் வளைமணிக்கு
வையத் திருக்கை கயிலையில் வெண்மங்கு னேர்கல்வளை
வையத் திருக்கைப் பரியாக்கி பிள்ளைக்கு மானனையார்
வையத் திருக்கை யயர்ந்தாளென் றோது மதுகரமே. (௪௧)

கரவடம் பத்தி யிலார்க்களிப் போயிருள் காய்ந்திடும்பாற்
கரவடம் பத்தி யொளிபாய் முலைச்சங் கரிபெறுமைங்
கரவடம் பத்திரக் காறுஞ்சு மான்மரு காசந்த்ரசே
கரவடம் பத்திரட் கல்வளை யாபெனைக் காத்தருளே. ()

அருந்துதிக் கையமில் கற்பீந்த மேனை யசலவரை
யருந்துதிக் கைக்கு மகளாய்ப் பிறந்திடு மன்னைவிட்
மருந்துதிக் கைப்புனை கூறைப் பிருகி யருள்கல்வளை
யருந்துதிக் கைக்குன்ற மேயடி யேனுன் னடைக்கலமே

அடைக்கலங் காவென்ற போர்க்கிளி யான்மட வன்னக்கண
மடைக்கலங் காரஞ் சினையென் றணைகல் வளைவரைவா
யடைக்கலங் காட்டுந் தனத்தீர் விரக மகலப்பொன்னி
லடைக்கலங் காக்கவென் றென்று குணதிசையாவதுவே

வனத்தானை யன்றெழு மம்மானை யம்புலி மானணிசெவ்
வனத்தானை யன்ன வயற்கல்,வளைப்பெரு மானைமறை
வனத்தானை பனக் கணைமலை மான்மரு மானையைம்பூ
வனத்தானை யன்புசெய் வார்முலைப் பாலை மறந்தவரோ. ()

சவராக மாகன கச்சிலை கோலிபொற் றுள்பெறமைத்
தவராக மாக விடந்தவன் சாபந் தவிர்த்தவன்மா
தவராக மாகநற் காமுரல் கல்வளைத் தந்திரன்மா
தவராக மாகரன் கண்ணுறு பூங்கொன்றைத் தாமத்தனே.

மத்தன் பராபரை சீராட்டு பிள்ளை மணிமந்தர
மத்தன் பராவிச் சிவந்திடு சேவடி வாய்ந்தபது
மத்தன் பராகவெண் ணீறணி கல்வளை வானவனு
மத்தன் பரான வரன்றே கயிலையில் வாழ்பவரே. (சஎ)

பவநம் புயர்தொண்டர்க் கில்லாமை யாக்கும் பரன்கனனீ
பவனம் புயங்க முடியேந்து மண்ணின் படிவன்கருப் [ர்
பவனம் புயலளக் குங்கல் வளைப்பதி மீதிலுறை
பவனம் புயன்றொழும் பாதாம் புயனெம் பரதெய்வமே.

பரமாநந் தக்கன் மழைமாரி காத்திடும் பைங்கனகாம்
பரமானந் தக்கந் தரவிந் திராணி பதியயனும்
பரமானந் தக்கல் வளையத்த னுத்தம பத்தர்சித்தன்
பரமானந் தப்பிள்ளை யார்துணைச் சேவடிப் பங்கயமே.

பங்கைய மாலை யளிக்குழல் வாய்முலை பன்மொழிகோ
பங்கைய மாலை யனையாட் குதவரன் பாலன்றடப்
பங்கைய மாலை யலர்கல் வளைக்கண் பரிந்தொருகூ
பங்கைய மாலைபந் தொட்டியற் றுரெப் படியுய்வரே (ரு0)

வருந்தும் பிறவி யலைவாரி நீந்த மதுவினைக்க
வருந்தும்பி வீழ்மலர்த் தாட்புணை தாகன்னல் வான்கதிர
வருந்தும் பிரகாசப் பொற்றேர் தடுக்கும் வளக்கல்வளை
வருந்தும்பி மாமுகத் தையாமெய் யாமுண்ட வண்டியனே

வண்ட மருங்குழை யான்மரு கன்கல் வளைச்சிலம்பா
வண்ட மருங்குலை ஞாளியு மாறு வருமதர்வாய்
வண்ட மருங்குலை விற்கொண்ட வேட்டுவர் மாவலிது
வண்ட மருங்குலிளவஞ்சி பாலல்லின் வாரலையே. (ருஉ)

வாரிக் கடுக்கை தனையண்டர் சொல்ல வரவெனைநீர்
வாரிக் கடுக்கையி னுற்பாவி யிர்கன் மனத்துவைத்தேன்
வாரிக் கடுக்கைமென் ருன்றுஞ்சு காமயி லாடக்கண்டு
வாரிக் கடுக்கைசெம் பொன்னூற்று கல்வளை வாசனையே.

வாசவ னந்தர நாட்டோர் துதிக்கு மதக்கலுழி
வாசவ னந்தற்கு ஞானோப தேசம் வழங்குமெய்யா
வாசவ னந்த வளவளை சேர்கல் வளைப்பதியின்
வாசவ நந்தர விபோலுன் முடலை வைத்தருளே. (ருச)

அருக்கரைக் கன்ன நெடுங்கல் வளைய னறுகிதழி [நே
யருக்கரைக் கன்னங்கை யைத்தந்தை யாயுடை யான்வினை
யருக்கரைக் கன்னலிற்றீர்ப்பான்வரைமின்ன ராமணிப்பை
யருக்கரைக் கன்ன நடைக்கென்ற னுவி யகன்றதுவே.

அகம்பத்தர் நெஞ்சமுங் கல்வளைக் கோட்டமு மானவன்றீ
யகம்பத் தரைச்சங் கரித்தோன் மருகன்றன் டாழிவெள்
யகம்பத் தரென்றளி யூதாத பூவிறைத் தன்புருகி [ளி
யகம்பத்தர் தாம்பெறும் பேறய னுலு மளப்பரிதே. (ருசு)

அப்பா தசமல நீக்கிச் சிலம்பிசை யார்த்திடுங்கோ
லப்பா தகமலம் பூசித்து நேசிக்க வன்புதவா
யப்பா தகமலங் கார்வயற் கல்வளை யாதிபொன்மு
தப்பா தசமலந் தாங்குஞ் சடைக்கரு ணாகரனே. (ருஎ)

கருவரம் பாயயி னேக்கியர் தூறுகற் றுக்கற்றுப்ப
கருவரம் பாயப் படேலன்ன மேகல் வளைக்களிற்றைக்
கருவரம் பாய்ந்துகண்டோர்காட்டுதூபத்தின் கற்றையளக்
கருவரம் பாயதுண் டாலிக்கு மாலிக் கனமல்லவே. (ருஅ)

கனஞ்சஞ் சரித்திடும் வண்டலை தண்டலைக் கல்வளையே
கனஞ்சஞ் சலமுறு பாசா டவிவெளி கண்டவனேங் [ங்
கனஞ்சஞ் சரிசொலும் வேற்கண் ணிடைச்சுக் கருங்குழலு
கனஞ்சஞ் சரிகங் களேநீ ரிருக்கை கடனல்லவே. (ருகூ)

கடம்பிடிக் குங்கமஞ் சூன்மா லளந்திடுங் கல்வளையான்
கடம்பிடிக் குங்கர டத்தறு கட்சிறு கட்களிறு
கடம்பிடிக் குப்புய னீருட்டு வெற்பநங் காமர்வஞ்சி
கடம்பிடிக் குங்கண்கள் காதள வோடிக் கதித்தனவே. ( )

கதிரைக் கடவுள் குறமானை மேவச்செய் கங்கணநா [நெற்
கதிரைக் கடலொலி போன்மள்ள ரார்த்துக் களைந்தசெந்
கதிரைக் கடைச்சியர் போரேற்றுங் கல்வளை யாய்கனக்
கதிரைக் கடவயிற் றூர்ப்பரயென் றல்வருங் கைவலமே.

வரச்சந் திரனெனுஞ் செந்தமிழ்ற் பந்தம் வழுத்துநற்ற
வரச்சந் திரணத்தின் மாற்றுங் கோசல மந்தலுலா
வரச்சந் திரதில கம்வளர் கல்வளை மானுயிர்க
வரச்சந் திரவி னடந்தா னுணவென வந்ததுவே. (சஉ)

வந்தனை யன்பர் மனத்தூன் டைபடு மாதங்கங்க
வந்தனை யன்றுகொன் றேன்முக னாபிசண் வாய்காஞ்சி
வந்தனை யன்பணி கல்வளை யான்வரா மன்னவனி
வந்தனை யன்றெனின் மானுயி ரம்புலி மானுண்ணுமே. ( )

மான வலக்கண்ட வாவினைப் பஞ்சினை மாய்க்குரம்ப
மான வலக்கண்டை மாவுரி யான்வன சப்பதத்தின்
மான வலக்கண் டரித்தோன் புகழ்கல் வளையிற்பெரு
மான வலக்கண் டகர்க்கொழிப் பாயென மாலறுமே. ( )

மாலை யனங்கஞ் சரியோன் பதம்பெரி துன்றுமன்றி
மாலை யனங்கங் கைவார் சடிலேசன் மதலைகொன்ற
மாலை யனங்கஞ் சணவெங் கணபண வாளரவன்
மாலை யனங்கங் குலாங்கல் வளையிரு மாதவர்க்கே. (சரு)

இரும்புண் டரவெண்டு கண்மணி மந்திர மெய்த்தன்பரை
யிரும்புண்ட நீரெனத் தற்சேர்க்கு நாதனை யிக்குவெம்ப
யிரும்புண்ட நீகமுஞ் சூழ்கல் வளையனை யெண்ணப்பண்ணி
யிரும்புண்டருமயிற்றென் றிசைக்கோன்பின்னைவெஃசெப்வனே

வன்னி களங்க னரிமா றுதிக்கு மலைமகள்கை ற்ற
வன்னி களங்கனி யென்றெண்ணு கண்டன் மகிழ்ந்துபெ
வன்னி களங்கப டற்றோர் பிறவி வலைப்பிணியாம்
வன்னி களங்களை புங்கல் வளைக்குழ்ப மாதங்கமே. (சுஎ)

தங்க மலையதி ஞல்வேதப் போலி தனைவரைமா
தங்க மலையச மேழ்காதம் வாசந் தருங்கல்வளை
தங்க மலையம் பிகைகுமரா வென்று சாற்றிற்சந்த
தங்க மலையரும் பாக்கொம் பிரண்டுந் தருவிப்பனே. (சுஅ)

தருமந்தக் காரிடத் தாக்கிடு மாமுகன் சந்தனப்பூந்
தருமந்தக் காலசை கல்வளை வாசன்றன் ஞட்டினின்மா
தருமந்தக் காலமுந் தப்பாமற் சாரதி தாரைத்துளி
தருமந்தக் கார்முந்த முன்றோர் கடவுதல் சால்புடைத்தே.

சாலிக்கு வாலிக்கு வெங்கணை யேவித் தயங்கியபாஞ்
சாலிக்கு வாலிய தூசருள் கோலமுன் ருங்குபொறை
சாலிக்கு வாலிப மார்க்கண்டர்க் கீந்தவன் றந்தமைந்தன்
சாலிக்கு வாலிக்கு வான்ருவுங் கல்வளைத் தானத்தனே.

தான வரங்கம்பங் கஞ்செய்யுஞ் சாரங்கன் ருழுமுத்தித்
தான வரங்கது வாவேற் குமரன் றழையமழைத்
தான வரங்கம் பலத்தான் றருகளி றேகல்வளைத்
தான வரங்க ளுதவாயென் சித்தத் தறியுனின்றே. (எக)

சித்தம் பரமுத் தலைவேலன் பாம்பரை சிக்கெனவி
சித்தம் பரமுத் தரிகங்கொண் டோன்மைந்தன் செய்யிற்பரி
சித்தம் பரமுத்த நாகொன்று கல்வளைத் தேவையுன்னுஞ்
சித்தம் பரமுத்த ராவாருக் காகுஞ் செயத்தம்பமே. (எஉ)

தம்பஞ் சுரதஞ்செய் யாதீன்ற சேய்தொழுந் தாளினன்கீ
தம்பஞ் சுரமிழற் றுஞ்சோலைக் கல்வளைச் சாரலிற்பா
தம்பஞ் சுரத்துப் படச்சேக்கும் பொற்கொடி சற்பத்தினி
தம்பஞ் சுரருண்டி போன்மொழி தேன்குழ ருனெங்குமே.

கும்ப னகத்திய னூலளந் தோகொற்ற வாசல்வளைக்
கும்ப னகத்திற் கனகா சுரற்செற்ற கோளரியே [வாய்க்
கும்ப னகத்தின் சிறகரிந் தோன்ருெழுங் கோன்வெற்பின்
கும்ப னகத்தின் புலிதாங்கி யோகுறைந் தாய்புயமே. (எச)

புயங்கந் தரித்தவன் கட்கலன் பூண்டு சிலம்பிசுற்றப்
புயங்கந் தமைந்து மடக்கிச் சடம்புற்று மூடவெம்பேய்
புயங்கந் தரத்தக்க கானுறை மாதவப் போதர்க்கன்றம்
புயங்கந்த நாறிடுங் கல்வளை யானடிப் போதரிதே. (எரு)

அரியா தவனிந் தளகேசன் வானயி ராபதத்தி
னரியா தவனிறைஞ் சுந்தாட் பதுமமண் டார்பிறப்பை
யரியா தவனி மலக்கல் வளையுறை யத்தபொய்யர்க்
கரியா தவநிலை யார்க்கெளி யானெ னகப்பொருளே. (எசு)

கப்பணத் தந்தமில் வெஞ்சூரட் டோனுடன் கார்விடநா
கப்பணத் தந்த வரைக்குற மாதின் கருத்துறவா
கப்பணத் தந்தக் கரிபாய்வந் தோர்க்கிடங் கஞ்சத்திரா
கப்பண த்தந்தவழ் செய்தொறு மாமுரல் கல்வளையே.

கல்லார மூரற்பெண் ணுக்குபின் ணுக்கணைக் கண்ணனெண்
கல்லாரஞ் செங்கமு நீர்வாவி மேவிய கல்வளையான் [ணுங்
கல்லா ருவியங் குன்றத்தி னேற்றுன் கணவர்பொன்னே
கல்லாரம் பூமுருக் கென்ரு றறிந்திலன் கான்மயிலே. (எஅ)

கானகத் தானத்தி சூழிலங் கேசனைக் காய்ந்துவெண்மை
கானகத் தானத்தில் வீழ்த்தரன் சேய்வளை கான்றமுத்தங்
கானகத் தானத் திருள்சீய்த்துந் கல்வளைக் கட்டுபின்னற்
கானகத் தானத்தி யென்றேத்தி னென்பவக் கட்டறுமே.

கட்கஞ்ச மள்ளர் களைகளை கல்வளைக் கத்தன்றறு
கட்கஞ் சனைவதைத் தோன்மருகன் வரைக் காவன்மின்னே
கட்கஞ் சனப்புயல் பொங்கா கால கடுவடுவேற்
கட்கஞ் சமானம் வரைப்பா யிருதொழில் காட்டிரே.

அரக்கர விந்தறக் கொன்றோன் பெறாவமு தேவெங்கொலை
யாரக்கர விந்தம் பயில்வன நீர்த்தண்மி ஞெநின்றுகே
ளரக்கர விந்தன் குலத்தோர் மணிகையி னுறகல்வளை
யரக்கர விந்தம் புனைவோர்க் கொலிக்கு மரவங்களே. ()

வங்கங் கணவர் நிதிதேடப் போனதென் வாய்ந்தபிலை
வங்கங் கணச்சி யுடைச்குங் குடக்கனி வார்ந்தநற
வங்கங் கணவி மடைதத்து தென்கல் வளையிலா
வங்கங் கணன்கிரி யன்னுள்பொன் னங்க மருவுறவே. ()

மருக்காவி னுறிடக் குங்குசலு வாலையம் வாசங்கொள்ள
மருக்காவி பூம்பண்ணை நாறிடுங் கல்வளை வார்சொன்றைத்
மருக்காவி யன்ன வளைப்பா டிலர்கவி வாணரென்க [தா
மருக்காவின் பாலுருத் தாலெனப் பாடுவர் மாந்தரையே.

தரைக்குந் ததிக்குங் கனிவாயங் காந்து தயங்கியமந்
தரைக்குந் தவாளி தனுவாங்கு மால்பணி தற்பரன்மைந்
தரைக்குந் தளக்கஞ்ச மான்மகிழ் கல்வளை தங்கியநா[ரே
தரைக்குந்தன் முன்னவனைப்பாட லாற்கொள்வர் சங்கத்த

சங்கர னுட்டத் திரண்டன்று நாற்பொறிச் சர்ப்பம்வன
சங்கர னுட்டந் தவிர்த்தோன் றுயில்வடந் தண்டரளஞ்
சங்கர னாட்டயில் சேர்வஞ்சி கல்வளைத் தந்தியங்கு
சங்கர னுட்டன்பி னன்பகண் டாயென் றனதுயிரே.

தனக்காக்கை யன்றி வழங்காரைப் பாடித் தளர்பசிய
தனக்காக்கை யுண்ணு முடல்வீங் கிடச்சலித் தேன்சிலையோ
டனக்காக்கைபோக்கியநோக்கினன்மைந்தசண்காரிவனைச்சா
தனக்காக்கைநீட்டுதென் கல்வளை யன்பர் சகாயத்தனே.

காயப் படவு துளங்கிச் சிலேட்டுமக் கால்விசைத்துக்
காயப் படவு முடியுதை யோமலர்க் காவணமா
சாயப் படவுயர் கல்வளை நாத கரியுரியே
காயப் படவுமை காதல னின்ற கரமஞ்சனே (அஎ)

மஞ்சரிக் கண்ணிமின் வேணியன் கல்வளை வாசன்மணி
மஞ்சரிக் கண்ணிய சாபத்தை மாற்றும் வரதன்வெற்பின்
மஞ்சரிக் கண்ணிப் புயத்தாய் மனங்கலங் காயின்றுநீ
மஞ்சரிக் கண்ணி நகைக்குடைந் தாயுன் மனத்துரமே. ()

துரங்கந்தந் தாவளந் தேரா ளெனும்படை சூழ்ந்திடுஞ்சா
துரங்கந் தரணி படைத்திந்த்ர லோகமுந் துய்ப்பரிதோ
துரங்கந் தனிலுறை மாலேத்துங் கல்வளைத் தும்பிகற்சிந்
துரங்கந்தவேடுணைக்கன்பானமெய்த்திருத்தொண்டருக்கே

அருமந்த மாருதத் தேரோற்கு மைத்துன னுனபிரா
னருமந்த மாமுகன் கல்வளை யான்வெற்பி னுடவரை
யருமந்தக் கார்க்குழன் மாலையும் வாடின தையமில்லை
யருமந்த மானுக்கிருப்புவெள்ளே றுடையான் வையமே.

வைப்பர சத்தி யுரியா னிடத்தின் மகிழ்தருபார்
வைப்பர சத்தி திருமுலைப் பாலுண்ட வாயன்மத
வைப்பர சத்தி செறிந்திடுங் கல்வளை வானவர்கோ
வைப்பர சத்தினம் பெற்றாரற் றார்துயர் மாநிலத்தே. ()

மாவாரணமெனக்கொண்டோன்விழிபட்டுமாய்ந்தவெங்கா
மாவா ரணங்க ளொருநாலு மேத்தி வணங்குமந்த [கண்
மாவா ரணங்கல் வளையான்றந் தான்கொன்றை மாலையெங்
மாவாரணங்கினையென்செய்குவாய்மலர்வாளிகொண்டே.

வாள முருக்கிதழ் வல்லவை சேர்கல் வளையிற்பிர
வாள முருக்கித வேணியன் வெற்பின் மதித்தசக்ர
வாள முருக்கு முலையாய் மலர்க்கரங் கொண்டுகர
வாள முருக்கயி னோர்வாரி பொத்துதன் மற்றரிதே.(௧௩)

மற்கடந் தாவருங் காமேவு கல்வளை வாசன்வெங்கா
மற்கடந் தார்புகழைங்கரன் வெற்பில்வன் பார்த்தனுடன்
மற்கடந் தான்கட் டழல்குளிர் தீச்சுர வரிியென்று
மற்கடந் தாங்கிய கொங்கையெவ் வாறு மருவினளே. ()

மாக்கணி யார்தம் மலரேட விழ்த்து வயினிடத்த
மாக்கணி யாரெனச் சோதிடஞ் சொல்லினர் வாளரிச்ச
மாக்கணி யாதுசெய் வாணம் விதிவசம் வல்லவைவா
மாக்கணி யார்மைந்தர் கல்வளை வாசர்மலையகத்தே. (௯௫)

கத்தாறு காலிசை யார்க்குங் குழற்கரும் பேயுயர்மா
கத்தாறு காலக் கருமாரி வந்தது கன்னியம்பூ
கத்தாறு காலுங் கனியள்ளி யாரங்கரைசிந்திவே
கத்தாறு கால்வருங் கல்வளை வாழைங் கரன்வெற்பிலே! ([illegible])

கரனுக ராமுனி மாதுள மேந்திய கல்வளையான்
கானுக ராவற நேமிப் படைகைக்கல மேவிவரு
கரனுக ராசன் பணிபெரு மான்புகழ் கற்றிடச்சி
கரநாக ராதிப னுயிர நாப்பெற்ற காரணமே. (௯௭)

காரப் பிணைவிழி வல்லவை பாலமர் கல்வளையான்
காரப் பிணையென வெங்குகின ரேன்வெற்பிற் காமரந்த
காரப் பிணையற் சுருள்வஞ்சி பார்க்கன்னியீர்பொறியா[டே
காரப்பிணைபொன் றுவந்ததுண் டோசொல்லுங்கண்டதுண்

கண்டால முண்ட பெருமா னுகவிய கான்முளைபுன்
கண்டால மாந்தர்க் ககற்றுகு வாகனன் கல்வளையின்
கண்டால நேருங் கரத்தானைக் காணத் தொழப்புகழக்
கண்டாலங் கைத்தலம் பெற்றேனற் றேனென் கனதுயரே.

கனகந் தரநிற மால்சாபந் தீர்த்திடுங் காரணவென் [கோ
கனகந்தரநெஞ்சிற்றுன்றுபுனமாலைக்கொள்ளைசெங்
கனகந் தருமலர் கோவைசெய் நாருங் கவினுமனறே
கனகந் தரள மணிமாடக் கல்வளைக் கற்பகமே. (௧00)

கல்வளையந்தாதி முற்றிற்று.